# Tnpsc Model Question Paper 14 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. திராவிட மகாஜன சபையை நிறுவியவர் யார்?
(அ) சர்.P.Tதியாகராயர் **(ஆ) அயோத்தியதாசர் பண்டிதர்**
(இ) ஜோதிபா பூலே (ஈ) அய்யா வைகுந்தர்

2. "வள்ளலார்" எனப் பலராலும் அறியப்பட்டவர்?
(அ) இராம கிருஷ்ணர் (ஆ) அயோத்திதாசர் **(இ) இராமலிங்க அடிகள்** (ஈ) அய்யன்காளி

3. கீழ்க்கண்ட இணைகளில் எது தவறானது?
1. பட்டினப்பாலை – கடியலூர் உருத்திரங் கண்ணனார்
2. பதிற்றுப்பத்து – எட்டு சேர மன்னர்கள் குறித்து பேசுகிறது
3. மதுரைக்காஞ்சி – முதுகுடுமி பெருவழுதி பற்றி குறிப்பிடுகிறது.
4. திருவஞ்சைக்களம் – கரிகால சோழனை பற்றி கூறுகிறது
(அ) 1 மற்றும் 2 (ஆ) 2 மற்றும் 3 (இ) 3 மட்டும் **(ஈ) 4 மட்டும்**

4. கீழ்க்காண்பவற்றைச் சரியாகப் பொருத்துக:
அ. உயிரியல் பன்முகத்தன்மை சட்டம் 1. 1972
ஆ. தேசிய பசுமை தீர்ப்பாயங்கள் 2. 2010
இ. சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 3. 2002
ஈ. வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் 4. 1986

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **(அ)** | **3** | **2** | **4** | **1** |
| (ஆ) | 2 | 3 | 1 | 4 |
| (இ) | 3 | 4 | 1 | 2 |
| (ஈ) | 4 | 3 | 1 | 2 |

5. ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கிய அறிகுறி
**(அ) இரத்தச் சோகை** (ஆ) உடல் பருமன் (இ) சிறுநீரக செயலிழப்பு (ஈ) இரவு குருட்டுத்தன்மை

6. தமிழ்நாடு அரசால் சிறப்பாகச் செயல்படும் நூலகர்களை பெருமைப்படுத்துவதற்காக --------- விருது வழங்கப்படுகிறது.
**(அ) டாக்டர்.எஸ்.ஆர்.ரெங்கநாதன்** (ஆ) திரு.கவிமணி (இ) காமராஜர் (ஈ) கலைஞர்

7. பொருத்துக:
ஐந்தாண்டு திட்டங்கள் மந்திரிகள் அல்லது நோக்கங்கள்
அ. இரண்டாம் திட்டம் 1. ஹாரேட் டாமர்
ஆ. முதல் திட்டம் 2. மகலா நோபிசு
இ. ஒன்பதாவது திட்டம் 3. சமூக நீதியுடன் கூடிய சமமான வளர்ச்சி
ஈ. மூன்றாவது திட்டம் 4. காட்கில் திட்டம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **2** | **1** | **3** | **4** |
| ஆ. | 2 | 1 | 4 | 3 |
| இ. | 2 | 4 | 3 | 1 |
| ஈ. | 2 | 3 | 1 | 4 |

8. உள்ளாட்சி அமைப்புகளின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
(அ) டல்ஹெளசி பிரபு (ஆ) ஜார்ஜ் ராபின்சன் பிரபு

**(இ) ரிப்பன் பிரபு** (ஈ) மவுண்ட் பேட்டன் பிரபு

9. இந்தியாவில் உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்து ஆணையம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
(அ) 1985 **(ஆ) 1986** (இ) 1987 (ஈ) 1988

10. இந்தியாவில் எந்தப் பகுதியில் அல்பைன் காடுகள் பெருமளவில் இருக்கின்றன?
(அ) தக்காண பீடபூமி (ஆ) கங்கை டெல்டா
**(இ) கிழக்கு இமயமலை** (ஈ) கிழக்குத் தொடர்ச்சி மலைகள்

11. இஸ்லாம், இந்து சமயம் உள்ளிட்ட பல்வேறு சமயங்களைச் சார்ந்தக் கூறுகள் தன் கல்லறையில் இடம்பெற வேண்டுமென வலியுறுத்தியவர்
(அ) அசோகர் **(ஆ) அக்பர்** (இ) ஷாஜஹான் (ஈ) ஔரசங்கசீப்

12. இந்தியாவில் அமைந்துள்ள, சீக்கியர்களின் புகழ்பெற்ற யாத்திரைத் தலம்
(அ) மணாலி (ஆ) பாட்னா **(இ) அமிர்தசரஸ்** (ஈ) ஜலந்தர்

13. சோழ அரசின் மூத்த மகன் -------- என அழைக்கப்பட்டார்
**(அ) யுவராஜன்** (ஆ) இளவரசர் (இ) அரசர் (ஈ) ஆளுநர்

14. டெல்லி சுல்தானியத்தின் கடைசி அரச மரபு
(அ) கில்ஜி மரபு **(ஆ) லோடி மரபு** (இ) சையது மரபு (ஈ) துக்ளக் மரபு

15. எந்த அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பை ஊக்குவிக்கின்றது?
(அ) அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 48 (ஆ) அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 49
(இ) அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 50 **(ஈ) அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 51**

16. ஒன்றிய அரசாங்கம் எந்த ஆண்டு நீதியரசர் ஆர்.எஸ்.சர்க்காரியா தலைமையில் ஆணையம் அமைத்தது?
(அ) 1990 (ஆ) 1985 **(இ) 1983** (ஈ) 1981

17. 2005 தகவல் அறியும் உரிமச் சட்டப்படி தகவலைப் பெறுவதற்கான கால வரம்பு என்ன?
(அ) 15 நாட்கள் (ஆ) 20 நாட்கள் (இ) 25 நாட்கள் **(ஈ) 30 நாட்கள்**

18. மாநிலத்தின் முதலமைச்சரை நியமனம் செய்பவர் யார்?
**(அ) ஆளுநர்** (ஆ) பிரதமர் (இ) குடியரசு தலைவர் (ஈ) தலைமை நீதிபதி

19. ஒரு வகுப்பில் 50 மாணவர்கள் உள்ளனர். ஒரு குறிப்பிட்ட நாளில் 14% பேர் வருகை புரியவில்லை எனில், வருகை புரிந்த மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க:
(அ) 41 (ஆ) 42 **(இ) 43** (ஈ) 44

20. $(y^3+1)$ மற்றும் $(y^2-1)$ ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தியைக் காண்க:
(அ) $(y^2+1)$ **(ஆ) (y+1)** (இ) (y+1) (ஈ) $(y+1)^2$

21. ஒரு உள்ளீடற்ற கோளத்தின் கன அளவு $\frac{11352}{7}$க.செ.மீ மற்றும் அதன் வெளி ஆரம் 8 செ.மீ எனில் அக்கோளத்தின் உள்விட்டத்தின் அளவு காண்க: ($\pi = \frac{22}{7}$ என்க)
(அ) 5 செ.மீ **(ஆ) 10 செ.மீ** (இ) 15 செ.மீ (ஈ) 20 செ.மீ

22. மேரி, நந்தினியின் வயதைப் போல் மும்மடங்கு மூத்தவர். 10 ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்களின் வயதுகளின் கூடுதல் 80 ஆக இருக்கும் எனில், மேரியின் தற்போதைய வயதினைக் காண்க:
**(அ) 45** (ஆ) 35 (இ) 25 (ஈ) 15

23. இராஜீவின் தந்தை வயதானது, இராஜீவின் வயதைப் போல் 3 மடங்கை விட 5 அதிகம். இராஜீவின் தந்தை வயது 44 எனில், இராஜீவின் வயது என்ன?
(அ) 10 (ஆ) 11 **(இ) 13** (ஈ) 18

24. 72 மற்றும் 108 ஆகிய எண்களால் மிகச் சரியாக வகுபடக்கூடிய, மிகச்சிறிய 5 இலக்க எண் ---------- ஆகும்
**(அ) 10152** (ஆ) 11052 (இ) 15052 (ஈ) 09936

25. $\frac{a}{3} = \frac{b}{4} = \frac{c}{7}$ எனில் $\frac{a+b+c}{c}$ =
(அ) 7 **(ஆ) 2** (இ) $\frac{1}{2}$ (ஈ) $\frac{1}{7}$

26. P என்பது ÷ என்பதையும், Q என்பது x என்பதையும், R என்பது + என்பதையும், S என்பது – என்பதையும் 18Q12P4R5S6 குறித்தால், என்பதன் மதிப்பு
(அ) 50 **(ஆ) 53** (இ) 54 (ஈ) 59

27. 4 P + S r q B # A 3 ? 7 C > Z % 6 d & Q @ 1 தொடரில் 16வது உறுப்பிற்கு இடதுபுறமுள்ள 7வது உறுப்பு என்ன?
**(அ) A** (ஆ) C (இ) Z (ஈ) S

28. A என்பவர் B என்பவரைக் காட்டிலும் வேலை செய்வதில் மூன்று மடங்கு வேகமானவர். B ஆனவர் ஒரு வேலையை 24 நாட்களில் முடிப்பார் எனில், இருவரும் இணைந்து அந்த வேலையை முடிக்க எத்தனை நாட்கள் எடுத்துக் கொள்வர் எனக் காண்க:
**(அ) 6 நாட்கள்** (ஆ) 7 நாட்கள் (இ) 8 நாட்கள் (ஈ) 9 நாட்கள்

29. 81 மாணவர்கள் 448 மீ நீளமுள்ள ஒரு சுவரில் ஓர் ஓவியத்தை 56 நாட்களில் வண்ணமிடுவர். 160 மீ நீளமுள்ள அது போன்ற சுவரில் 27 நாட்களில் வரைய தேவைப்படும் மாணவர்கள் எண்ணிக்கையை காண்.
(அ) 40 (ஆ) 50 (இ) 55 **(ஈ) 60**

30. சதீஷ்குமார் என்பவர் ஒரு கடன் வழங்கு நபரிடமிருந்து ரூ.52, 000 ஐ ஒரு குறிப்பிட்ட தனிவட்டி வீதத்தில் கடனாகப் பெற்றார். 4 ஆண்டுகள் கழித்து சதீஷ்குமார் ரூ.79, 040 ஐ மொத்தத் தொகையாகச் செலுத்தினார் எனில், வட்டி வீதத்தைக் காண்க:
(அ) 10% (ஆ) 11% (இ) 12% **(ஈ) 13%**

31. ராமன் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு 8% வட்டிவீதம் 4 ஆண்டுகள் கழித்து ரூ.800 ஐத் தனிவட்டியாகச் செலுத்தினால் அத்தொகையின் மதிப்பு
(அ) ரூ.2, 000 (ஆ) ரூ.2, 100 (இ) ரூ.2, 400 **(ஈ) ரூ.2, 500**

32. GST–யின் உள்ளடக்கங்கள் எத்தனை?
(அ) 2 **(ஆ) 3** (இ) 4 (ஈ) 5

33. பின்வருவனவற்றுள் எது இந்தியாவில் அதிகமானோர் செய்யும் தொழில்?
(அ) வாணிகம் (ஆ) கலைப்பொருட்கள் **(இ) வேளாண்மை** (ஈ) சுரங்கம்

34. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:
1954ஆம் ஆண்டு முதன்முதலில் சரக்கு மற்றும் சேவை வரியை (GST) நடைமுறைப்படுத்திய நாடு
(அ) இந்தியா **(ஆ) பிரான்ஸ்** (இ) ஜப்பான் (ஈ) அமெரிக்கா

35. 2015–16ஆம் ஆண்டு நிதி ஆயோக் அறிக்கையின்படி (NER) துவக்கநிலை நிகர மாணவர் சேர்க்கை வீதத்தின் அடிப்படையில் முதலிடம் வகிக்கும் மாநிலம் எது?
**(அ) தமிழ்நாடு** (ஆ) கேரளா (இ) மேற்கு வங்களாம் (ஈ) கர்நாடகம்

36. தமிழ் நாட்டில் உப்பு சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி ---------- ஆவார்

**(அ) ருக்மணி லட்சுமிபதி** (இ) அம்புஜம்மாள் (இ) லட்சுமி செகல் (ஈ) மூவலூர் இராமாமிர்தம்

37. வ.உ.சிதம்பரம் பிள்ளை சுதேசி நீராவிக் கப்பல் கழகத்தை எப்போது தொடங்கினார்?
(அ) 1905 **(ஆ) 1906** (இ) 1907 (ஈ) 1908

38. தீங்கு செய்பவரைத் தண்டிப்பதற்கு உரிய வழியாக வள்ளுவர் எதனைச் சுட்டுகிறார்?
(அ) அவருக்குத் தீமை செய்தல் (ஆ) அவருக்கு அறிவுரை கூறல்
**(இ) அவருக்கு நன்மை செய்தல்** (ஈ) அவருக்கு பணிந்து போதல்

39. சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பில்லாதவரின் நட்பை வள்ளுவர் எவ்வாறு சுட்டுகிறார்?
(அ) நனவிலும் துன்பம் தரும் **(ஆ) கனவிலும் துன்பம் தரும்**
(இ) மறுமையிலும் துன்பம் தரும் (ஈ) இன்பத்திலும் துன்பம் தரும்

40. புண் என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?
(அ) ஊழ் **(ஆ) புலால்** (இ) கண் (ஈ) நோய்

41. "அறம் பெருகும் வழி" எனத் திருவள்ளுவர் எதனைக் கூறுகின்றார்?
(அ) கோபச் சொற்களைக் கூறுதல் (ஆ) புகழ்ச் சொற்களைக் கூறுதல்
**(இ) இனிய சொற்களைக் கூறுதல்** (ஈ) பழியுடை சொற்களைக் கூறுதல்

42. உடலில் கலந்துள்ள பஞ்ச பூதங்களும் யாரைப் பார்த்துச் சிரிக்கும் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?
**(அ) வஞ்சமனத்தான்** (ஆ) ஒழுக்கமில்லாதான்
(இ) பொய்யுரைப்பவன் (ஈ) கல்லாதான்

43. காசநோயினால் பாதிக்கப்படும் முதன்மை உறுப்பு யாது?
(அ) எலும்பு மஜ்ஜை (ஆ) குடல் (இ) மண்ணீரல் **(ஈ) நுரையீரல்**

44. கீழ்க்கண்டவற்றுள் அமிலத்தைக் குறித்த சரியான கூற்று/கூற்றுகள் எது/எவை?
1. அமிலங்கள் $H^+$அயனிகளை தருகிறது.
2. அமிலங்கள், நீர்க்கரைசலில், $H^+$ அயனிகளை தருகிறது.
3. அனைத்து அமிலங்களும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதிலீடு செய்யப்படக்கூடிய ஹைட்ரஜன் அணுக்களை கொண்டவை.
(அ) 1 மட்டுமே **(ஆ) 2 மற்றும் 3 மட்டுமே** (இ) 1 மற்றும் 2 மட்டுமே (ஈ) 1 மற்றும் 3 மட்டுமே

45. -------- குறைக்கவும், சாலையுடனான தொடு பரப்பை அதிகரிக்கவும், கனரக சரக்கு வாகனங்கள் அதிக எண்ணிக்கையிலான சக்கரங்களைக் கொண்டுள்ளன.
**(அ) அழுத்தத்தை** (ஆ) திசைவேகத்தை (இ) அடர்த்தியை (ஈ) மேற்கண்ட அனைத்தும்

46. நியூட்டன் மீட்டர் (Nm) என்ற S.I. அலகு கீழ்க்கண்டவற்றுள் எவற்றிற்குப் பொருந்தும்?
**(அ) இரட்டையின் திருப்புத்திறன்** (ஆ) முடுக்கம் (இ) திசைவேகம் (ஈ) விசை

47. "செல்லாத பணம்" என்ற நாவலுக்காக 2020ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருது பெற்றவர் யார்?
(அ) ராமு **(ஆ) இமையம்** (இ) செல்லப்பன் (ஈ) குமார்

48. 1985ஆம் ஆண்டு திட்டக் குழுவினால் உள்ளாட்சி அரசாங்கம் தொடர்பாக நிறுவப்பட்ட குழு எது?
(அ) பல்வந்த்ராய் மேத்தா குழு **(ஆ) G.V.K.ராவ் குழு**
(இ) L.M.சிங்வி குழு (ஈ) அசோக் மேத்தா குழு

49. இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு மறைமுக வரிகளுக்கு மாற்றாக கொண்டு 2017–ல் வரப்பட்ட புதிய வரி எது?
(அ) விற்பனை வரி (ஆ) சுங்க வரி **(இ) சரக்கு மற்றும் சேவை வரி** (ஈ) வருமான வரி

50. 2021இல் அதிக மனித வளர்ச்சிக் குறியீட்டைக் கொண்ட நாடு
**(அ) நார்வே** (ஆ) சுவிட்சர்லாந்து (இ) டென்மார்க் (ஈ) சிங்கப்பூர்

51. சங்க காலம் என்பது ---------- உலோக காலத்தோடு தொடர்புடையது
(அ) செம்பு **(ஆ) இரும்பு** (இ) தங்கம் (ஈ) வெள்ளி

52. வள்ளலாரின் "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்" எப்போது நிறவப்பட்டது?
**(அ) 1865** (ஆ) 1867 (இ) 1866 (ஈ) 1868

53. 1891ல் சுதேசமித்ரன் என்ற பெயரில் தமிழில் ஒரு தேசிய பருவ இதழைத் தொடங்கியவர் --------
(அ) கோகலே **(ஆ) G.சுப்ரமணியம்** (இ) T.முத்துசாமி (ஈ) P.ரங்கையா

54. தமிழக மக்கள் 6ஆம் நூற்றாண்டியிலிருந்தே எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பதை கூறும் தமிழ்-பிரமி எழுத்துப் பொறிப்புகள் -------- இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
**(அ) கீழடி** (ஆ) கொடுமணல் (இ) ஆலங்குளம் (ஈ) உறையூர்

55. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் தந்தை என அழைக்கப்படுபவர்
(அ) மகாத்மா காந்தி **(ஆ) எம்.எஸ்.சுவாமிநாதன்** (இ) என்.ஆர்.விஸ்வநாதன் (ஈ) ஜவஹர்லால் நேரு

56. முக்கிய நகர்ப்புற ஒருங்கிணைப்பு உள்ள மாவட்டங்கள்
**(அ) கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி**
(ஆ) சென்னை, திண்டுக்கல் மற்றும் பெரியகுளம்
(இ) திருநெல்வேலி, சேலம் மற்றும் செங்கல்பட்டு
(ஈ) காஞ்சிபுரம், காரைக்குடி மற்றும் பட்டுக்கோட்டை

57. பின்வருவனவற்றில் லுகோடெர்மா அல்லது வெண்நோய் பற்றி உண்மை கருத்து எவை?
1. இது ஒரு தொற்றாத நோய்.
2. இது தோல் நிறமி இழப்பை ஏற்படுத்தும் ஒரு தோல் நோய்.
3. இந்நோய்க்கு சிகிச்சை அளிக்க முடியாது.
(அ) 1 மற்றும் 2 (ஆ) 2 மற்றும் 3 (இ) 1 மற்றும் 3 **(ஈ) 1, 2 மற்றும் 3**

58. பின்வருவனவற்றுள் எது நீர் வள பாதுகாப்பு முறை அல்ல?
(அ) சிக்கனமாக நிலத்தடி நீர் பயன்பாடு (ஆ) நவீன நீர்ப்பாசன முறைகளைப் பயன்படுத்துதல்
**(இ) காடுகளின் பரப்பளவைக் குறைத்தல்** (ஈ) மரபு வழி நீர்வளங்களைப் புதுப்பித்தல்

59. தமிழ்நாட்டில் கல்வியறிவு விகிதம் அதிகம் கொண்ட மாவட்டம் எது?
(அ) திருநெல்வேலி (ஆ) சென்னை **(இ) கன்னியாகுமரி** (ஈ) வேலூர்

60. இந்தியாவில் தாமிரப்படிவு அதிகமுள்ள மாநிலம் எது?
**(அ) இராஜஸ்தான்** (ஆ) அருணாசல பிரதேசம் (இ) உத்திரப்பிரதேசம் (ஈ) சட்டீஸ்கர்

61. "மான்சூன்" என்ற சொல் ------------ மொழிச் சொல்லிலிருந்துப் பெறப்பட்டது.
(அ) உருது (ஆ) இந்தி **(இ) அரபிக்** (ஈ) கிரேக்க

62. பாண்டிய அரசு "செல்வ செழிப்பு மிக்க, உலகிலேயே மிக அற்புதமான பகுதியாகும்" என புகழ்ந்து கூறிய அறிஞர் ---------- ஆவார்.
(அ) பாஹியான் **(ஆ) மார்க்கோ போலோ** (இ) மெஸ்தனிஸ் (ஈ) ஹீவான் சாங்

63. பழமையான திராவிட மொழி ---------- ஆகும்.
(அ) மலையாளம் (ஆ) தெலுங்கு **(இ) தமிழ்** (ஈ) இந்தி

64. சிந்து சமவெளி நாகரிக மக்களின் முதன்மையான தொழில் எது?
**(அ) விவசாயம்** (ஆ) போர்த்தொழில் (இ) வேட்டையாடுதல் (ஈ) மீன்பிடி தொழில்

65. கீழ்க்கண்டவற்றுள் எந்த ஒன்று இந்திய குடியுரிமையைப் பெறும் வழி அல்ல?
**(அ) சொத்துரிமை பெறுவதன் மூலம்** (ஆ) வம்சாவழியின் மூலம்
(இ) பிறப்பின் மூலம் (ஈ) இயல்பு குடியுரிமை மூலம்

66. எந்த சட்டத்திருத்தச் சட்டம் இந்திய குறு அரசியலமைப்பு என அழைக்கப்படுகிறது?
(அ) 41வது சட்டத்திருத்தச் சட்டம் **(ஆ) 42வது சட்டத்திருத்தச் சட்டம்**
(இ) 43வது சட்டத்திருத்தச் சட்டம் (ஈ) 44வது சட்டத்திருத்தச் சட்டம்

67. லோக் ஆயுக்தா உறுப்பினர்களை நியமனம் செய்பவர் யார்?
(அ) மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி (ஆ) மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம்
**(இ) மாநில ஆளுநர்** (ஈ) மாநில முதலமைச்சர்

68. மின் ஆளுகை நீதிமன்றங்கள் திட்டம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
(அ) 2009 (ஆ) 2010 (இ) 2007 **(ஈ) 2005**

69. 20% விலை உயர்விற்குப் பின் ஒரு கிலோ உளுந்தம் பருப்பின் விலை ரூ.96 எனில் ஒரு கிலோ உளுந்தம் பருப்பின் அசல் விலையைக் காண்க:
(அ) ரூ.86 (ஆ) ரூ.84 (இ) ரூ.78 **(ஈ) ரூ.80**

70. 60, 75 மற்றும் 90 ஆகிய மூன்று எண்களின் மீச்சிறு பொதுமடங்கு மற்றும் மீப்பெரு பொது வகுத்தி இவற்றிற்கிடையேயான வித்தியாசம் என்ன?
(அ) 895 (ஆ0 899 (இ) 845 **(ஈ) 885**

71. ஒரு நேர்வட்டக் கூம்பின் கனஅளவு 11088 செ.மீ$^3$ ஆகும் கூம்பின் உயரம் 24 செ.மீ எனில், அதன் ஆரம் காண்க:
(அ) 20 செ.மீ **(ஆ) 21 செ.மீ** (இ) 19 செ.மீ (ஈ) 18 செ.மீ

72. நீளம் 3 மீ மற்றும் விட்டம் 2.8 மீ உடைய ஒரு சமன்படுத்தும் உருளையைக் கொண்டு ஒரு தோட்டம் சமன்படுத்தப்படுகிறது. 8 சுற்றுகளில் எவ்வளவு பரப்பை உருளை சமன் செய்யும்?
(அ) 72 மீ$^2$ **(ஆ) 211.2 மீ$^2$** (இ) 200.2 மீ$^2$ (ஈ) 92 மீ$^2$

73. ஒரு கடிகாரத்தை கண்ணாடியில் பார்க்கும்போது 12 : 15 எனக் காட்டுகிறது. ஏனில் கடிகாரத்தின் சரியான நேரம் எவ்வளவு?
(அ) 1 : 15 **(ஆ) 11 : 45** (இ) 12 : 30 (ஈ) 12 : 45

74. கொடுக்கப்பட்ட, இரு எண்களானது 13 : 15 என்ற விகிதத்தில் உள்ளது மற்றும் அவற்றின் மீ.பொ.ம 39, 780 எனில் அவ்விரு எண்கள் ---------- ஆகும்
(அ) 670, 1340 (ஆ) 884, 1020 (இ) 884, 1040 **(ஈ) 2652, 3060**

75. கலா மற்றும் வாணி இருவரும் நண்பர்கள். இன்று எனது பிறந்த நாள் எனக் கலா கூறினாள். வாணியிடம் "உன் பிறந்த நாளை எப்போது நீ கொண்டாடினாய்" எனக் கேட்டாள். அதற்கு வாணி "இன்று திங்கள் கிழமை, நான் என்னுடைய பிறந்தநாளை 75 நாட்களுக்கு முன் கொண்டாடினேன் எனப் பதிலளித்தாள்". வாணியின் பிறந்தநாள் எந்த கிழமையில் வந்திருக்கும் எனக் காண்க:
(அ) வியாழக்கிழமை (ஆ) செவ்வாய்கிழமை **(இ) புதன்கிழமை** (ஈ) வெள்ளிகிழமை

76. அமுதா ஒரு சேலையை 18 நாள்களில் நெய்வார், அஞ்சலி, அமுதாவை விட நெய்வதில் இருமடங்கு திறமைசாலி. இருவரும் இணைந்து நெய்தால், அந்தச் சேலையை எத்தனை நாட்களில் நெய்து முடிப்பர்?
(அ) 9 நாட்கள் **(ஆ) 6 நாட்கள்** (இ) 5 நாட்கள் (ஈ) 4 நாட்கள்

winmeen.com

77. பதினெட்டாவது மற்றும் பதினேழாவது பிபனோசி எண்களுக்கிடையேயான வித்தியாசம்
(அ) 233 (ஆ) 377 (இ) 610 **(ஈ) 987**

78. ஒருவரிடம் 10 செ.மீ, 11 செ.மீ, 12 செ.மீ ... செ.மீ என்ற பக்க அளவுள்ள 15 சதுர வடிவ வண்ணக் காகிதங்கள் உள்ளன. இந்த வண்ண காகிதங்களைக் கொண்டு எவ்வளவு பரப்பை அடைத்து அலங்கரிக்க முடியும்?
(அ) 4156 ச.செ.மீ (ஆ) 4165 ச.செ.மீ **(இ) 4615 ச.செ.மீ** (ஈ) 5615 ச.செ.மீ

79. ஒரு குறிப்பிட்ட அசலானது கூட்டு வட்டி வீதத்தில் முதலீடு செய்யும் போது 2 ஆண்டுகளில் ரூ.4.624, 3 ஆண்டுகளில் ரூ.4, 913ம் தொகையாக கிடைக்கிறது எனில் அசல்
**(அ) ரூ.4, 096** (ஆ) ரூ.4, 260 (இ) ரூ.4, 335 (ஈ) ரூ.4, 360

80. ஒரு நகரத்தின் மக்கள் தொகை ஆண்டுக்கு 6% வீதம் அதிகரிக்கிறது. இப்பொழுது அதன் மக்கள் தொகை 238765 எனில் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் தொகை
(அ) 248276 **(ஆ) 268276** (இ) 348176 (ஈ) 368276

81. 1960–61இல் ஏழு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட "முன்னோடிதிட்டம்" என்ற புதிய தொழிலநுட்பம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
(அ) அதிக விளைச்சல் தரும் பழங்களை உற்பத்தி செய்வதற்கான திட்டம்
(ஆ) வெண்மைப்புரட்சி
**(இ) அதிக விளைச்சல் தரும் ரகங்களை உற்பத்தி செய்வதற்கான திட்டம்**
(ஈ) நிலப்புரட்சி

82. இந்திய அரசியலமைப்பில் அதிகாரங்களில் பிரிவில் ஏழாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மத்தியப் பட்டியலில் எத்தனை இனங்கள் உள்ளன?
(அ) 61 (ஆ) 52 (இ) 96 **(ஈ) 100**

83. கீழ்க்கண்டவற்றில் மாறுபட்ட வரி எது?
(அ) செல்வ வரி (ஆ) வருமான வரி (இ) நிறுவன வரி **(ஈ) முத்திரைத் தாள் வரி**

84. 1940ஆம் ஆண்டு காமராசர் "வார்தா" சென்று சந்தித்தது
(அ) நேரு **(ஆ) காந்திஜி** (இ) திலகர் (ஈ) ஜின்னா

85. சரியான விடையைத் தேர்வு செய்க:
சென்னை மாகாணத்தின் முதல் காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தவர் ---------- ஆவார்
(அ) T.பிரகாசம் **(ஆ) ராஜாஜி** (இ) காமராசர் (ஈ) சுப்பிரமணிய சிவா

86. Dr.B.R.அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்ட ஆண்டு
(அ) 1987 (ஆ) 1989 **(இ) 1990** (ஈ) 1991

87. எந்த காங்கிரஸ் அமர்வில் முழு சுதந்திரத்தை (பூர்ண ஸ்வராஜ்) தனது குறிக்கோளாக அறிவித்தது?
**(அ) 1929 லாகூர் அமர்வு** (ஆ) 1929 கல்கத்தா அமர்வு
(இ) 1932 லக்னோ அமர்வு (ஈ) 1932 டெல்லி அமர்வு

88. நீதிநெறியுடன் மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை வள்ளுவர் எவ்வாறு அழைக்கிறார்?
(அ) மக்கட்கு உயிர் (ஆ) மக்கட்கு அமிழ்து **(இ) மக்கட்கு இறை** (ஈ) மக்கட்கு உடல்

89. ஒருவரின் நகைக்கும் உவகைக்கும் பகையாக இருப்பது எது என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?
(அ) அச்சம் (ஆ) அழுக்காறு (இ) அழுகை **(ஈ) சினம்**

90. பிறனில் விழைவானிடத்து எவை நான்கு நீங்காது இருக்கும்?
(அ) இன்பம், துன்பம், மகிழ்ச்சி, பொருள் **(ஆ) பகை, பாவம், அச்சம், பழி**

winmeen.com

(இ) பொருள், பெருமை, சிறப்பு, மேன்மை (ஈ) வறுமை, துன்பம், பாவம், நோய்

91. பிறரால் விரும்பப்படாதவன் செல்வத்தைத் திருவள்ளுவர் எதற்கு ஒப்பாகக் கூறுகின்றார்?
(அ) ஊர் நடுவில் இனிய மரம் பழுத்தது போன்றது
(ஆ) யாருக்கும் பயன்படாது புதைத்து வைக்கும் செல்வத்துக்கு ஒப்பாகும்
(இ) களைகளைப் போன்று பயனற்றதாம்
**(ஈ) ஊர் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது**

92. கிளைக்காலிஸில் நடைபெறும் இடம் ---------- ஆகும்
**(அ) சைட்டோபிளாசம்** (ஆ) மைட்டோகாண்டரியம் (இ) பசுங்கணிகம் (ஈ) நியூக்ளியஸ்

93. பாலூட்டிகளின் தனித்தன்மை ----------- ஆகும்
(அ) குளிர் இரத்த விலங்குகள் (ஆ) காற்றறைகள் கொண்ட எலும்புகள்
(இ) செவுள்கள் இருப்பது **(ஈ) தாய்–சேய் இணைப்புத்திசு**

94. 3 : 1 என்ற விகிதாச்சாரத்தில் உள்ள அடர் அமிலங்கள் ----------- தங்கத்தை சுத்தம் செய்யவும், சுத்திகரிக்கவும் பயன்படுகிறது.
**(அ) HCl மற்றும் $HNO_3$** (ஆ) HCl மற்றும் $H_2SO_4$
(இ) $HNO_3$ மற்றும் $H_2SO_4$ (ஈ) $HNO_3$ மற்றும் HCl

95. கரித்தாரிலிருந்து கிடைக்கும் எந்தப் பொருள் அந்துப்பூச்சி மற்றும் பிற பூச்சிகளை ஒழிப்பதற்குப் பயன்படுகிறது?
(அ) பென்சீன் (ஆ) அனிலீன் **(இ) நாப்தலீன்** (ஈ) டொலுயீன்

96. கீழ்க்காணும் அலகுகளில் வெப்பநிலையின் S.I.அலகு எது?
(அ) செல்சியஸ் **(ஆ) கெல்வின்** (இ) ஃபாரன்ஹீட் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

97. பின்வரும் நதிகளில் எது தமிழ் நாட்டில் இல்லாத ஒன்று?
(அ) வைகை (ஆ) தாமிரபரணி **(இ) கோதாவரி** (ஈ) பாலாறு

98. கீழ்க்கண்டவற்றுள் இஸ்ரோவின் எந்தத் திட்டம் மனிதர்களை விண்வெளிக்குக் குறைந்த சுற்றுப்பாதையில் அழைத்துச் செல்வதை நோக்கமாக கொண்டுள்ளது?
(அ) நாஸா (ஆ ஸ்பேஸ்–எக்ஸ் **(இ) ககன்யான்** (ஈ) அப்போலோ II

99. பேரிடர் மேலாண்மைச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு எது?
(அ) 2004 **(ஆ) 2005** (இ) 2006 (ஈ) 2007

100. தமிழ்நாடு அரசின் சமுதாய நலனுக்காக ஆற்றிய சேவைக்கு சிறந்த மூன்றாம் பாலினத்தவர் விருது பெற்றவர்
(அ) பானி **(ஆ) கிரேஷ் பானு** (இ) தஷா (ஈ) ஃபஹிமா

winmeen.com